18. செவ்வியல் இலக்கியங்களில் வெளிப்படுகின்ற பண்பாடு கலை குறித்த பட்டறிவுக் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

19. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் இரண்டின் சிறப்புக்களையும் தனித்தன்மைகளையும் புலப்படுத்துக.

20. சங்க இலக்கியப் பாடுபொருள்களுள் சிறப்பிடம் பெற்றுள்ள இயற்கைப் புனைவுகளை விவரிக்க.

———————



**S.No. 1226** **16 ACCTA 14**

(For candidates admitted from 2016 – 2021 batch)

B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2023.

Part III — Tamil — Major

தமிழின் செம்மொழிப் பண்புகள்

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு சொல்/தொடரில் விடையளிக்க.

1. செவ்வியல் – அறிஞர் பெருமக்களின் சொற்பொருள் விளக்கம் தருக.

2. தமிழ்கூறு நல்லுலகத்திற்குரிய எல்லைகள் குறித்து எழுதுக.

3. மாந்தன் முதன்முதலில் தோன்றிய நாடு குமரி நாடு என்று உணர்த்தியவர் யார்? கூறுக.

4. திராவிட மொழிகள் தவிர பிற மொழிகள் சிலவற்றை எழுதுக.

5. திணை இலக்கியங்கள் என்று சுட்டப்படுவன யாவை?

6. புறத்திணைகள் குறித்து எழுதுக.

7. செம்மொழி நூற்களுள் இலக்கண நூற்கள் எத்தனை? கூறுக.

8. எட்டுத் தொகை நூற்களை எழுத்துரைக்கும் பழம்பாடலை எழுதுக.

9. செம்மொழி இலக்கியத்தின் பாடு பொருள்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

10. தமிழர்கள் வழிபட்ட இயற்கைப் பொருள்கள் எவையெவை?

பகுதி ஆ — (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தலை சிறந்த சமுதாய நிகழ்வுகளே செவ்வியல் இலக்கியத்தின் பாடுபொருள் என்பதனை நிறுவுக.

(அல்லது)

(ஆ) செம்மொழி – செவ்வியல் – சொற்பொருள் குறித்த அறிஞர்களின் பதிவுகளை எடுத்தெழுதுக.

12. (அ) தமிழே உலகின் முதல் தாய்மொழி என்பதனை வலியுறுத்தும் குறிப்புக்களை விளக்கமாக எழுதுக.

(அல்லது)

(ஆ) திராவிடர்கள் என்போர் யார்? திராவிட நாகரிகம் எத்தகையது? கூறுக.



13. (அ) தமிழ்ச் செம்மொழியின் பண்புகளுள் ஒன்றான நடுவுநிலைமை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உயர் சிந்தனையை வெளிப்படுத்தும் தமிழ் இலக்கியத் தரவுகளை எழுதுக.

14. (அ) பத்துப்பாட்டு நூற்கள் குறித்து பொதுக் குறிப்புக்களைத் தருக.

(அல்லது)

(ஆ) அறச் செயல்களின் பிறப்பிடமாகச் செம்மொழி நூல்கள் திகழ்கின்ற பாங்கினைக் கூறுக.

15. (அ) அஃறிணைப் உயிர்களின் வாழ்வியலோடு தமிழ் அக இலக்கிய வாழ்வைப் பொருத்திப் பார்க்கும் திறத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) படைப்புக் கற்பனை குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. செவ்வியல் தகுதிக்கென அறிவிக்கப்பட்ட அடிப்படைக் கூறுகளை விளக்கமாக எடுத்தெழுதுக.

17. தென்திராவிட மொழிகளில் தமிழின் சிறப்புகள் குறித்து விவரிக்க.